ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/72 - 2020 මාර්තු මස 07 වැනි සෙනසුරාදා - 2020.03.07

*2165/72 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 01/ 2020*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை பொது மக்கள் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

எஸ். ஆர். ஆட்டிகல,
செயலாளர்,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, மாச்சு 07.

1A - PG 4922 — 567 (2020/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்**

கட்டளை

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அவ்வட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) அட்டவணை 'அ' இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக்கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் தலைமை அதிபதியை, இக்கட்டளை மூலம் தேவைப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, மாச்சு 07.*

**அட்டவணை**

| எச். எஸ். தலைப்பு இல. (1) | எச். எஸ். தலைப்பு இல. குறியீடு (2) | | விவரணம் (3) | சுங்கத் தீர்வை | | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | | | | முன்னுரிமை (4) | பொது (5) | |
| 07.13 | | | **உலர்த்திய அவரை இன மரக்கறி வகைகள், கோது நீக்கியவை, தோல் நீக்கப்பெறாதவை அல்லது பிளக் கப்பட்டவை அல்லது இரண்டும் செய்யப்படாதவை** | | | |
| | | --- | உழுந்து | | | |
| | 0713.31.21 | ---- | இரசாயன ரீதியில் சிகிச்சையளிக்கப் பட்டு, விதைப்பதற்கு சான்றுபடுத்தப் பட்ட, மற்றும் உண்ணத்தகாதவாறு செய்யப்பட்ட அவரை | | விலக்களிப்பு | கி. கிராம் |
| | 0713.31.22 | ---- | தோல் நீக்கப்பட்டவை, பிளக்கப்பட்டவை அல்லது பிளக்கப்படாதவை | | 15% | கி. கிராம் |
| | 0713.31.29 | ---- | பிற | | 15% | கி. கிராம் |

03-903